**சிவகாசி நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**

**சாதாரணக்கூட்டம் எண் .** **நாள்:30.09.2021.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் புரட்டாசி திங்கள் 14 ஆம் நாள் 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. சோ.பார்த்தசாரதி,B.P.T., M.Sc.(Psy).**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

| | | |
|---|---|---|
| 1 | சிவகாசி நகராட்சி வார்டு எண் 21 ரத்தினம் நகரில் உள்ள புதிய நகராட்சி அலுவலகத்தின் தெற்கு பகுதியில் உள்ள போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின் கம்பத்தை இடம்மாற்றி அமைப்பதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.44,390/-ஐ செலுத்தக்கோரி உதவி மின் பொறியாளர் நகர் மேற்கு மின்வாரியம், சிவகாசி அவர்களிடம் இருந்து அறிவிப்பு வரப்பெற்றுள்ளது. அதன்படி தொகை ரூ.44,390/-ஐ உதவி மின் பொறியாளர் நகர் மேற்கு மின்வாரியத்திற்கு செலுத்த நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம் .<br>2. அவசர அவசியம் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம்<br><br>ந.க.எண் : 5675 /2021/இ2 | மன்ற அனுமதி எண் - 1251 |
| 2 | சிவகாசி நகராட்சி 2019-2020ம் ஆண்டு சமூகத்தின் மீதான தொழிற் நிறுவனங்களின் நிதியின் கீழ் வார்டு எண்-7 பராசக்தி காலணி அங்கன்வாடி மையத்தில் கழிப்பிட கட்டிடம் கட்டுவதற்க்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்ாகின் செயல்முறை ஆணை ந.க.சி2/1065/2020-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.32000 (முப்பத்து இரண்டாயிரம் மட்டும் ) ஆகும் மன்றத்தின் பார்வைக்கும் முன்அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 5366/2021/இ1. | மன்ற அனுமதி எண் - 1252 |

<table>
<tr>
<td>3</td>
<td>சிவகாசி நகராட்சி புதிய அலுவகத்தில் ஆவண வைப்பறையில் கோப்புகள் மற்றும் பதிவேடுகள் வைத்து பராமரிப்பதற்கு 6 1/2” X 3 X 2 என்ற அளவில் 30 இரும்பு ரேக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3,75,000/-(மூன்று இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும் )ஆகும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : -<br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவுத்தொகையை பொது நிதியில் மேற்க்கொள்ளலாம்.<br><br>ந.க.எண். 4896/2021/இ1.</td>
<td>மன்ற அனுமதி எண் - 1253</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>சிவகாசி நகராட்சி பொது சுகாதார பிரிவு, பாரைப்பட்டி நகராட்சி உரக்கிடங்கில் 2015 - 2016 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Windrow Processing Unit நிறுவப்பட்டுள்ளது. பாரைப்பட்டி உரக்கிடங்கில் தினந்தோறும் சேகரமாகும் Fresh Waste குப்பைகளை மேற்படி இயந்திரத்தை பயன்படுத்தி Processing செய்ய 20 பணியாளர்களுக்கு ஆகும் செலீனம் தொகை ரூ. 9,50,000/- க்கு ( ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) இந்நகர் மன்ற தீர்மானம் எண் 1118, நாள்:12.05.2021-ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன்படி 13.08.2021 தேதி ஒப்பந்த புள்ளி கோரப்பட்டதில் கிழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>வைப்புத் தொகை ரூ</th><th>ஒப்ப</th></tr>
<tr><td>1</td><td>GREEN SOCIALITY,<br>Jolarapettai,<br>Velore District - 635851</td><td>ரூ.9,500/-</td><td>ரூ.</td></tr>
<tr><td>2</td><td>SUBASRI ENTERPRISE,<br>Jolarapettai-635851</td><td>ரூ.9,500/-</td><td>ரூ.</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு:-<br>1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.<br>2. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 2-ல் உள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 3992/2021/எச்1</td>
<td>மன்ற அனுமதி எண் - 1254</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 5 | அரசாணை (4ப) எண்.6 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2)துறை நாள்-03.09.2020-ன் படி சிவகாசி நகராட்சி பகுதில் அமைந்துள்ள காமாக் ரோடு பகுதில் அமைந்துள்ள பூங்காவில் உடர்பயிற்ச்சி கூடம் மற்றும் வேலாயுதம் சாலையில் உள்ள பூங்காவில் யோகா மையம் அமைப்பதர்க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-1061 நாள்-21.01.2021-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டது. ஆனால் மேற்படி இடங்களில் பணி மேற்க்கொள்வதில் மரம் அகற்றுதல் போன்ற சில தொழில் நுட்ப ரீதியான இடையூறுகள் உள்ளதால் மேற்படி இடங்கள் கீழ்கண்டவாறு இடமாறுதல் செய்து ஏற்கனவே பெறப்பட்ட மன்ற அனுமதி தீர்மானத்தினை ரத்து செய்து திருத்திய மன்ற அனுமதி வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>வ. எண் / பணியின் பெயர் / மதிப்பீடு ரூ.லட்சத்தில்<br>1. / அண்ணாவித்தோட்டம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் யோகா மையம் அமைத்தல் / ரூ.6.50<br>2. / நகராட்சி காமராஜர் பூங்காவில் உடற்ப்பயிற்சி மையம் அமைத்தல் / ரூ.15.00<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்-4955/2020/இ1 | மன்ற அனுமதி எண் - 1255 |
| 6 | சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில், தொடரப்படும் சிவகாசி நகராட்சிக்கு எதிரான வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி தருவதற்கு திரு.A.கண்ணன்,B.Com.,B.L.,D.LL.AL., வழக்கறிஞர், சேம்பர் எண் 97, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை,மதுரை அவர்களை சிவகாசி நகர்மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்யக் கோரி வழக்கறிஞரால் தனது 28.08.2021ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. தற்போதைய நிலையில் திரு.செந்தில்குமரய்யா, வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை,மதுரை அவர்கள் நகர்மன்ற வழக்கறிஞராக இருந்து வருகிறார். திரு.A.கண்ணன்,வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை,மதுரை அவர்களை சிவகாசி நகராட்சியின் நகர்மன்ற வழக்கறிஞராக நியமிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 4959/2021/பி2 | மன்ற அனுமதி எண் - 1256 |

| | | |
|---|---|---|
| 7 | இந் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடை கடை எண் 5க்கு 15.09.2021 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவர்கள் வைப்புத்தொகை ரூ.3,00,000/-க்காண வங்கி வரைவோலை செலுத்தி கலந்து கொண்டனர். | மன்ற அனுமதி எண் - 1257 |

**குத்தகை இனம் : 1**

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கடையின் பெயர் | ஏலத்தில் கேட்கப்பட்ட கேள்வித்தொகை | ஒப |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.A.காளீஸ்வரி, 74,A.J.நகர் திருத்தங்கல் | அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடை, கடைஎண் 5 | ரூ.18400/- | |
| 2. | திருமதி.A.மேனகா, 1283,P.K.N..ரோடு சோலை காலனி சிவகாசி | | ரூ.18300/- | |
| 3. | திரு.C.அருண்குமார், 1283,P.K.N..ரோடு சோலை காலனி சிவகாசி | | ரூ.14400/- | |

மேற்கண்ட பட்டியலில் வ.எண் 1ல் உள்ள திருமதி.A.காளீஸ்வரி, என்பவர் அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடை, கடை எண் 5க்கு உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியாக ரூ.18400/-கேட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

இந் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடை கடை எண் 6க்கு 15.09.2021 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவர்கள் வைப்புத்தொகை ரூ.3,00,000/-க்காண வங்கி வரைவோலை செலுத்தி கலந்து கொண்டனர்.

**குத்தகை இனம் 2:**

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கடையின் பெயர் | ஏலத்தில் கேட்கப்பட்ட கேள்வித்தொகை | ஒப்பந்தப் கோர தெ |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.க.மாலினி, 4/95ஏ, கிழக்கு தெரு, பேராப்பட்டி, அனுப்பன்குளம்-629129. | அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடை, கடைஎண் 6 | --- | ரூ.9 |
| 2. | திரு.வ.கண்ணன், 4/95ஏ, கிழக்கு தெரு, பேராப்பட்டி, அனுப்பன்குளம்-629129. | | --- | ரூ.9 |

மேற்கண்ட பட்டியலில் உள்ள ஏலதாரர்கள் அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடை கடை எண் 6க்கு அரசு மதிப்பீட்டு தொகை ரூ.10000/-க்கு குறைவாக ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளனர். எனவே மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இந் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி காய்கறி மார்கெட் எப் பிளாக்

கடை கடை எண் 3க்கு 15.09.2021 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவர்கள் வைப்புத்தொகை ரூ.3,00,000/-க்காண வங்கி வரைவோலை செலுத்தி கலந்து கொண்டனர்.

**குத்தகை இனம் 3:**

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கடையின் பெயர் | ஏலத்தில் கேட்கப்பட்ட கேள்வித்தொகை | ஒப்ப |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.அஜித்குமார், 378/2, கிழக்கு தெரு, ஆணையூர், விளாம்பட்டி. | அண்ணா தினசரி காய்கறி மார்கெட் எப் பிளாக் கடை கடை எண் 3 | --- | |
| 2. | திரு.ஏ.ஜோசப், 999, பராசக்தி காலனி, நேரு ரோடு, சிவகாசி. | | --- | |

மேற்கண்ட பட்டியலில் உள்ள ஏலதாரர்கள் அண்ணா தினசரி காய்கறி மார்கெட் எப் பிளாக் கடை கடை எண் 3க்கு அரசு மதிப்பீட்டு தொகை ரூ.6000/-க்கு குறைவாக ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளனர். எனவே மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குத்தகை இனங்கள் 4:**

மேலும் காமராஜர் வணிக வளாக கடைகள் அரசன் கணேசன் தங்கவிழா வணிக வளாக கடைகள், புதுரோட்டு தெருவில் உள்ள மீன் மார்கெட் கடைகள், சிவன் மாடவீதியில் உள்ள வணிக வளாக கடைகள் மற்றும் பெட்டி கடைகளுக்கு எவரும் வைப்புத்தொகை செலுத்தி ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு வரவில்லை. மேற்கண்ட இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.201/2021/அ4

8 இந் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமைக்கு 29.09.2021ம் தேதி அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவர்கள் வைப்புத்தொகை ரூ.1,10,000/-க்காண வங்கி வரைவோலை செலுத்தி கலந்து கொண்டனர். மன்ற அனுமதி எண் - 1258

**குத்தகை இனம் : 1**

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஆண்டு குத்தகை இனத்தின் பெயர் | ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச கேள்வித்தொகை | ஒப்பந்தப்புள்ளியில் குறிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.கே.லோகேஷ், த/பெ கருப்பசாமி, 7பி,சிங்கர் பிறை சந்து, திருத்தங்கல் | பேருந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டி வைத்து | ரூ.1,10,000/- | ரூ.1,38,402/- |
| 2. | திரு.கே.பூமிநாதன், | | ரூ.51,000/- | ரூ.55,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | 21ஏ, தங்கம்மாள் கோவில் தெரு, கோவில்பட்டி | விளம்பரம் செய்யும் உரிமம் | | |
| 3. | திரு.கே.காளிதாஸ், 20இ, தங்கம்மாள் கோவில் தெரு, கோவில்பட்டி | | ரூ.1,12,000/- | ரூ.60,000/- |

மேற்கண்ட பட்டியலில் வ.எண் 1ல் உள்ள திரு.கே.லோகேஷ் என்பவர் பேருந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளியாக ரூ.1,38,402/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து நானூற்றி இரண்டு மட்டும்) கேட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
மேலும் புதுரோட்டு தெருவிலுள்ள சீருந்து நிலையம், முண்டகன் தெருவிலுள்ள வேன் ஸ்டாண்ட், சிவன்மாட வீதி வணிக வளாக அடித்தளத்திலுள்ள இருசக்கர வாகன காப்பகம் மற்றும் நகராட்சி நீர்த்தேக்க நிலையம், வெம்பக்கோட்டை நீர்த்தேக்க நிலையத்தில் உள்ள தென்னை மரங்களின் மேற்பலன் அனுபவ உரிமைக்கு எவரும் வைப்புத்தொகை செலுத்தி ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு வரவில்லை. மேற்கண்ட இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.310/2020/அ4

9 சிவகாசி நகராட்சிக்கு சொந்தமான பழைய நகராட்சி அலுவலகத்திலுள்ள ஆணையாளர் அறை, பொறியாளர் அறை,உதவிப்பொறியாளர்கள் அறைகள், கணினி அறை, நகர்மன்றத்தலைவர் மற்றும் நகர் மன்ற துணைத்தலைவர் அறைகளில் உள்ள குளிரூட்டிகளை கழட்ற்றி பழுது நீக்கம் செய்து புதிய நகராட்சி அலுவலக்தில் பொருத்தும் பணி மற்றும் இரண்டு புதிய குளிரூட்டிகள் வாங்கும் பணிக்கு அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் தொகை ரூ.95,746/- (தொண்ணூாற்று ஐந்தாயிரத்து ஏழுநூாற்று நாற்பத்து ஆறு மட்டும்) செலவீனம் மேற்கொண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது. மன்ற அனுமதி எண் - 1259

அலுவலக குறிப்பு : - மன்றத்தில் பதிவு செய்யலாம்.

ந.க.எண். 4339/2021/இ1.

10 சிவகாசி நகராட்சி வெம்பக்கோட்டை அணையின் நீர்பிடிப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உரைகிணறுகளை சரிசெய்து குழாய் மூலம் தண்ணீர் சேகாரம் செய்யும் பணி மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3.50இலட்சத்திற்கு ( தொகை ரூ.மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 23.08.2021ம் தேதி பணி செய்ய அனுமதி அளித்துள்ளதின் படி மேற்காணும் பணிக்கு 01.09.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மன்ற அனுமதி எண் - 1260

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | கே.முருகேசன் , ஒப்பந்ததாரர் வடமலாபுரம் . | 16.14% மதிப்பீட்டை விட கூடுதல் | |
| 2. | எஸ்.பாண்டிமுருகன் | 3.13% மதிப்பீட்டை விட கூடுதல் | |

அலுவலகக் குறிப்பு :

அ)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்திரு எஸ்.பாண்டிமுருகன் என்பவர் மதிப்பீட்டினைவிட 3.13% கூடுதலாக தந்துள்ள விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 4526/2021/இ2

---

11 சிவகாசி நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடம் ஏற்படுத்தவும், பொதுமக்கள் செலுத்த வேண்டிய சொத்து வரி, குடிநீர் வரி, கடை வாடகை, குத்தகை இனங்கள், தொழில் வரி, தொழில் உரிமக் கட்டணம் மற்றும் இதர வரி இனங்கள் போன்றவற்றை நகராட்சி கருவூலத்தில் நிலுவையின்றி செலுத்தவும் கீழ்க்கண்ட இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு மொத்தம் ரூ.42,917/- (நாற்பத்தி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினேழு)-ஐ அந்நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்ற அனுமதி எண் - 1261

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **விளம்பரம் செய்யப்பட்ட நாள்** | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1 | தினகரன் நாளிதழ் | 14.08.2021 | 32,917 |
| 2 | தீக்கதிர் நாளிதழ் | 15.08.2021 | 10,000 |
| | **மொத்தம்** | | **42,917** |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1856/ 2020/ எச்1**

---

12 சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN-84 V 1156-க்கு பின்புறம் உள்ள பட்டைகட்டு உள்ள பட்டைகள் உடைந்து விட்டதாலும் மற்றும் ஜாக்கியும் இயங்கததால் வாகனம் பழுது ஏற்பட்டுள்ளது. ஆதலால் மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9,900/-க்கு (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது . மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின்

மன்ற அனுமதி எண் - 1262

<table>
<tr><td></td><td>அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண். 4915 / 2021 / எச்2 )</td><td></td></tr>
<tr><td>13</td><td>சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN95C 2353 க்கு பழுது பணிகள் பார்க்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் விதி 15ன் கீழ் தொகை ரூ.38,437/-க்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி வாகனம் எண் TN95C 2353 - ஐ பழுது பணிகள் பார்த்த வகைக்கு தொகை ரூ.38,437/-ஐ AUTOMOTIVE MANUFACTURERS PVT.LTD –MADURAI-க்கு வழங்கவும், இப்பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொண்டமைக்கும் ,தொகை வழங்குவதற்கும் மன்றத்தின்பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. .<br><br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம் .<br><br>ந.க.எண் : 4544 /2021/இ2</td><td>மன்ற அனுமதி எண் - 1263</td></tr>
<tr><td>14</td><td>சிவகாசி நகராட்சி ராணி அண்ணா காலனி, வெம்பக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி நுண் உரக்குடிலில் இயங்கி வரும் காய்கறி கழிவுகளை உரமாக்கும் இயந்திரத்தின் உள்பாடி தகடுகள் மற்றும் வெட்டும் கத்திகள் தேய்மானம் காரணமாக புதிதாக 6 எண்ணம் மாற்றும் பணிக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.9,500/-(ரூபாய் ஒன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்)-ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 4930 /2021/எச்1</td><td>மன்ற அனுமதி எண் - 1264</td></tr>
<tr><td>15</td><td>சிவகாசி நகராட்சி ராணி அண்ணா காலனி, வெம்பக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி நுண் உரக்குடிலில் இயங்கி வரும் காய்கறி கழிவுகளை உரமாக்கும் இயந்திரத்தின் உள்பாடி தகடுகள் மற்றும் வெட்டும் கத்திகள் தேய்மானம் காரணமாக புதிதாக 6 எண்ணம் மாற்றும் பணிக்கு தொகை ரூ.9,500/-(ரூபாய் ஒன்பதாயிரத்து ஐந்நூறு)-க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி 31.03.2021-ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>உள்பாடி தகடுகள் மட்டும் வெட்டும் கத்திகள் புதிதாக மாற்றும் பணிக்கு தொகை. ரூ.</th></tr>
<tr><td>1</td><td>கிளாசிக் பவர் எலக்ட்ரிக்கல்ஸ், சிவகாசி.</td><td>ரூ.10,000/-</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ செல்லாயி அம்மன் கிராதி வெல்டிங் ஒர்க்ஸ், சிவகாசி.</td><td>ரூ.10,500/-</td></tr>
<tr><td>3</td><td>ஆர்.கே.ஆர். லேத் ஒர்க்ஸ், சிவகாசி.</td><td>ரூ.9,500/-</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண் 3-</td><td>மன்ற அனுமதி எண் - 1265</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ல் உள்ள ஆர்.கே.ஆர். லேத் ஒர்க்ஸ், சிவகாசி விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவருக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 4930 / 2021/ எச்1)** | |
| 16 | அரசாணை எண் G.O.(M.S) NO.166 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 23.11.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.32050/2016/ஜே2, நாள் : 26.10.2017-ன் படி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளிலுள்ள கழிப்பறை பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகம் தூய்மைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கான செலவீனங்களை சொத்துவரியுடன் வசூல் செய்யப்படும் கல்வி நிதி ( ELEMENTRY EDUCATIONAL CHESS ) மூலம் செலவினம் மேற்கொண்டு பள்ளிகளின் தூய்மையையும் சுத்தத்தையும் பராமரித்திட தனியார் ஒப்பந்த மூலம் முழு வேலை நாளும் பணிபுரியும் பணியாளர்களை அரசு வகுத்துள்ள வழிமுறைகளின் படி நியமித்து தூய்மையாக பராமரித்து வர நகராட்சிகளுக்கு பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நமது நகராட்சியில் 6 நகராட்சி பள்ளிகளில் சுத்தம் செய்யும் பணிக்கு 18 துப்புரவு பணியாளர்கள் அரசு விதி முறையின் படி தேவைப்படுகிறது. தனியார் ஒப்பந்தம் மூலம் ஈடுபடுத்திட ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மூலம் நடவடிக்கை எடுத்திடவும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் அந்தந்த ஆண்டுகளில் தினசரி கூலி நிர்ணயம் செய்ததன் அடிப்படையில் தொகை வழங்கிடவும் மேலும் கழிவறைகளில் எண்ணிக்கை அடிப்படையில் தினசரி தூய்மைப்படுத்திட தேவைப்படும் சுத்த படுத்த வாளிகள், கோப்பைகள் Urinalcubes Toilet, Bowl Cleaner, Floor Cleaner, Broom Stick, Bleaching Powder, பினாயில் கொண்டு பள்ளி வளாகத்தினை 3 மணி நேரத்திற்கு ஒரு முறையும் கழிவறைகளை காலை வேலையில் 3 முறையும் மாலை 2 முறையும் தூய்மைப்படுத்தும் பொருட்டு மற்றும் பராமரிப்பு செலவினத்தையும் கல்வி நிதியில் செலவு செய்திடவும் ஆண்டு மொத்த செலவீன தொகை ரூ. 31,00,000/- (ரூபாய் முப்பத்தி ஒன்று இலட்சம்) ஆகும். மேற்படி தனியார் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டத்தினை தனியார் வசம் ஒப்படைக்கவும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்திடவும் மற்ற இதர செலவினத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1. அரசாணை எண். G.O.(M.S) NO.166, நாள் : 23.11.2016.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 32050/2016/ஜே2, நாள்: 26.10.20217<br><br>மன்றத்தின் பார்வைக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண். 5678 / 2021/ எச்1)** | மன்ற அனுமதி எண் - 1266 |
| 17 | சிவகாசி நகராட்சி பகுதிக்கு அருகில் அமைந்துள்ள பேர்நாக்கன்பட்டி புதிய உரக்கிடங்கு பேர்நாயக்கன்பட்டி கிராம நில அளவை எண் 200மற்றும் 201ல் ஒருகிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் 2018-2019-ன் கீழ் 40KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.486.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இவ்வலுவலக வேலை உத்தரவு ந.க.எண்-6710/2019/இ1 நாள்-01.10.2019-ன் படி ஒப்பந்த நிறுவனமான திருப்பூர் M/S CTR & SONSக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனம் குறித்த காலத்தில் பணிமுடிக்காமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்த நிலையில் 01.10.2020, 21.05.2021 மற்றும் 21.06.2021ம் நாளிட்ட அறிவிப்புகளின் மூலமாக பணி முடிக்க கேட்டுக்கொண்டும் பணியை ஒப்பந்த நிறுவனம் முடிக்கவில்லை. | மன்ற அனுமதி எண் - 1267 |

எனவே இந்நகர் மன்றத்தின் 30.07.2021ம் நாளிட்ட தீர்மான எண்-1158-ன் படி பணிக்கான வேலை உத்தரவை ரத்து செய்ய அனுமதி வழங்கியதின் பெயரில் இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்-6710/2019/இ1 நாள்-30.07.2021-ல் வேலை உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது. இப்பணிக்கு இதுவரை செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவுத்தொகை ரூ.37.20இலட்சம் (அளவு புத்தக எண்-07/2020-2021) ஆகும். இதுவரை செய்யப்பட்டுள்ள பணிகள் போக மீதமுள்ள பணிக்கான மதிப்பீடு ஏற்கனவே தொழில் நட்ப்ப அனுமதி பெறப்பட்ட விலைவிகிதத்தின் படி (2018-2019) ரூ.435.00 இலட்சத்தில் ( ரூ.நாநூற்று முப்பத்தி ஐந்து இலட்சம் மட்டும் ) இப்பணியை மேற்க்கொள்ளவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்ப்படும் நிதியிழப்புகளை பொறியாளர் கையேடு Engineering Manuval 52&55- ன் படி CTR & Sons நிறுவனதிதிடமிருந்து பிடிமானம் மூலம் வசூல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்கண்ட பணியை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கி மறு ஒப்பந்துபுள்ளி கோரியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்

ந.க.எண் : 6710/2019/இ1

18 சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN67Z3195 க்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுது நீக்கப் பணிகளை செய்ய தொகை ரூ.1,43,000/-க்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண் 1096, நாள்: 25.02.2021 ம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது அதன் படி இப்பணிக்கு 15.09.2021-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மன்ற அனுமதி எண் - 1268

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகித |
|---|---|---|
| 1. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி | 1,43,300/ |
| 2. | வேங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி | 1,64,550/ |

அலுவலகக் குறிப்பு :
அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி தந்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவுவழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்

ந.க.எண்: 5133/2020/இ2

19 சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN67X3964 க்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுது நீக்கப் பணிகளை செய்ய தொகை ரூ.68,500/-க்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் படி இப்பணிக்கு 15.09.2021-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி | 68,500/- |
| 2. | வேங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி | 69,100/- |

அலுவலகக் குறிப்பு :
அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி தந்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவுவழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 4544/2021/இ2

மன்ற அனுமதி எண் - 1269

20 இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN-84 V 1164 (TATA ACE) இலகுரக வாகனத்தில் உள்ள டயர்கள் பழுதடைந்துள்ளதாலும் மேற்கண்ட வாகனத்திற்கு புதியதாக டயர்கள் (SIZE 155/80/D12/SVR வாங்கி பொருத்த சரி செய்யும் பணிக்கு தொகை ரூ14500/-க்கு (ரூபாய். புதினான்காயிரத்து ஐநூறு மட்டும்) இந்நகர்மன்ற தீர்மான எண் 1173 நாள்: 30.07.2021-ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.08.2021 தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **விபரம்** | **தொகை. ரூ.** |
|---|---|---|
| 1. | JEYA PRAKASH ENTER PRISES,<br>21, KAMAK ROAD,<br>SIVAKASI. | 14500/- |
| 2. | JEYA GOWTHAM TYRES,<br>12/474 MEENAM PATTI.<br>SIVAKASI. | 15000/- |
| 3. | JAYAM TREADS,<br>21B, KAMAK ROAD,.<br>SIVAKASI | 16000/- |

**அலுவலக குறிப்பு :**
**1.** மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் உள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதாலும் மேலும் மேற்படி வாகனம் தினந்தோறும் குப்பை சேகரிக்கும் பணிக்கு அத்தியாவசிய தேவையாக உள்ளதாலும் மேற்படி விலைப்புள்ளியினை மன்றம்

மன்ற அனுமதி எண் - 1270

அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 3920 / 2021/ எச்2

21 சிவகாசி நகராட்சியில், குடிநீர் நிதியில் 2019-2020ம் ஆண்டு தணிக்கை ஆய்வு முடிவு பெற்றுள்ளது. அதில் குடிநீர் நிதி பத்தி எண்.27ல் தொகை ரூ.2,000/-யை திரு.கே.பிச்சைக்கனி , பத்தி எண்.28ல் தொகை ரூ.4,833/-யை, திரு.கே.முருகேசன், மெசர்ஸ்.ரவிராஜ் கன்ஸ்ட்ரக்சன்ஸ், பத்தி எண்.35ல் தொகை ரூ.1,750/-யை திரு.கே.பிச்சைக்கனி ஆகிய ஒப்பந்ததாரர் பெயரில் தணிக்கைத் தடை நிலுவையாக உள்ளது. எனவே மேற்படி தணிக்கை தடையை நிவர்த்தி செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரரின் பெயரில் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2021-2022-வால்யூம்-Iல் குடிநீர் நிதி மற்றும் 2021-2022-வால்யூம்-I ல் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.8,583/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து, சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு ஈடுசெய்யும் பொது நடவடிக்கை குறிப்புச்சீட்டு (GJV) மூலம் ஈடுசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

மன்ற அனுமதி எண் - 1271

| வ. எண் | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 4016 RF / 4016 WF | ஒப்பந்ததாரரின் பெயர் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு ஆண்டு | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பதிவேட்டின் வரிசை எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2021-2022 வால்யூம் - I 4016 WF | ராவிராஜ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 2021-2022 | 6 | 70 | 300 |
| | | | | | 71 | 700 |
| 2 | 2021-2022 வால்யூம் - I 4016 WF | கே.முருகேசன் | 2021-2022 | 7 | 79 | 3600 |
| | | | | | 80 | 200 |
| | | | | | 81 | 333 |
| 3 | 2021-2022 வால்யூம் - I 4016 RF | கே.பிச்சைக்கனி | 2021-2022 | 16 | 205 | 2000 |
| | | | | | | 1750 |
| | | | | | **மொத்தம்** | **8883** |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்

ந.க.எண். 4704/2021/பி4

<table>
<tr>
<td>22</td>
<td>
சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் அசோக் லைலேண்ட் லாரி எண் TN67W5156 க்கு 12V 100 Ah பேட்டரி 2 எண்ணம் வாங்கி பொருத்தும் பணிக்கு தொகை ரூ.17,000/-க்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்: 03.09.2021ம் தேதி பணி செய்ய அனுமதி அளித்துள்ளதின் படி மேற்காணும் பணிக்கு 15.09.2021-ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலை விகிதம் ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி</td><td>17,000/-</td></tr>
<tr><td>2.</td><td>வேங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி</td><td>18,400/-</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
அ) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி தந்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவுவழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br><br>
ந.க.எண்: 4543/2021/இ2
</td>
<td>மன்ற அனுமதி எண் - 1272</td>
</tr>
<tr>
<td>23</td>
<td>
சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் டிடாக்டர் எண் TNR892 க்கு 12V 100 Ah பேட்டரி 1 எண்ணம் வாங்கி பொருத்தும் பணிக்கு தொகை ரூ.8,500/-க்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்: 03.09.2021ம் தேதி பணி செய்ய அனுமதி அளித்துள்ளதின் படி மேற்காணும் பணிக்கு 15.09.2021-ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலை விகிதம் ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி</td><td>8,500/-</td></tr>
<tr><td>2.</td><td>வேங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி</td><td>9,200/-</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
அ) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி தந்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவுவழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில்
</td>
<td>மன்ற அனுமதி எண் - 1273</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளலாம்.<br><br>ந.க.எண்: 4545/2021/இ2 | |
| 24 | 24. | இந் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கடைகள், காமராஜர் வணிக வளாக கடைகள், அரசன் கணேசன் தங்கவிழா கடைகள், சிவன் மாடவீதி வணிக வளாக கடைகள் புது ரோட்டுத் தெருவில் உள்ள மீன்மாாக்கெட் கடைகள் மற்றும் பெட்டி கடைகளுக்கான மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மதுரை மணி தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.51610/-வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ.51610/-(ரூபாய் ஐம்பத்தோறாயிரத்து ஆறு நூற்று பத்து மட்டும் ) மதுரை மணி தினசரி நாளிதழுக்கு வழங்குவதற்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.201/2021/அ4<br><br>தனி அலுவலர்,<br>சிவகாசி நகர்மன்றம். | மன்ற அனும தி எண் - 1274 |